Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935



# பள்ளி பாடப்புத்தகங்களில் 'இந்தியா' பெயர் 'பாரத்' என மாறுகிறது என்.சி.இ.ஆர்.டி. உயர் மட்டகுழு பரிந்துரை

சென்னை, 26 அக்டோபர் 2023: 'இந்தியா' என்ற பெயருக்கு பதிலாக 'பாரத்' என்று பள்ளி பாடப்புத்தகங்களில் மாற்றுவதற்கு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்.சி.இ.ஆர்.டி.) அமைத்த உயர்மட்டக்குழு பரிந்துரைத்துள்ளது.

'இந்தியா' என்ற பெயரை பாரத் என மாற்றுவது என்ற கருத்து கடந்த சில மாதங்களாக பேசப்பட்டு வருகிறது. சமீபத்தில் ஜி20 அழைப்பிதழில் இந்திய ஜனாதிபதிக்கு பதிலாக பாரதத்தின் ஜனாதிபதி என்று குறிப்பிடப்பட்டது. அதேபோல், டெல்லியில் நடந்த ஜி20 உச்சிமாநாட்டில் பிரதமர் மோடிக்கு முன்பு வைக்கப்பட்டு இருந்த பெயர் பலகையில் 'இந்தியா' என்பதற்கு பதிலாக 'பாரத்' என்று பதிவிடப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் பாரத் என்ற பெயர் தற்போது பாடப்புத்தகங்கள் வரை ஒலிக்கத் தொடங்கிவிட்டது. அனைத்து பள்ளி பாடப்புத்தகங்களின் பாடத்திட்டத்தை திருத்தி அமைக்க தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்.சி.ஆர்.டி.) அமைத்த சமூக அறிவியலுக்கான உயர்மட்டக் குழு தான் இந்த பரிந்துரையை அளித்து இருக்கிறது.

அதன்படி, அந்த குழு, 'அனைத்து பாடங்களுக்கான பாடத்திட்டத்தில் இந்தியா என்ற பெயரை பாரத் என்று மாற்றவும், பண்டைய வரலாறு என்பதற்கு பதிலாக பாரம்பரிய வரலாற்றை (கிளாசிக்கல் ஹிஸ்டரி) அறிமுகப்படுத்தவும், பாடத்திட்டத்தில் இந்திய அறிவு அமைப்பை (ஐ.கே.எஸ்.) அறிமுகப்படுத்தவும்' பரிந்துரைத்து உள்ளது.




இந்த உயர்மட்டக் குழுவின் தலைவராக சி.ஐ.ஐசக் இருக்கிறார். இந்த குழுவில் இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில் தலைவர் ரகுவேந்திர தன்வார், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியர் வந்தனா மிஸ்ரா, டெக்கான் கல்லூரி நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வசந்த் ஷின்டே, அரியானா அரசு பள்ளி சமூகவியல் ஆசிரியர் மம்தா யாதவ் ஆகியோர் உறுப்பினராக உள்ளனர்.

இவர்கள் அனைவரும் பாடப்புத்தகங்களில் இந்தியா என்ற பெயரை பாரத் என்று மாற்றுவது உள்பட சிலவற்றை ஒருமனதாக பரிந்துரைத்து இருக்கின்றனர்.

இதுபற்றி அந்த குழுவின் தலைவர் சி.ஐ.ஐசக் கூறும்போது, 'பாரதம் என்ற பழமையான பெயர் 7 ஆயிரம் ஆண்டுகள் பழமையான விஷ்ணு புராணம் போன்ற பண்டைய நூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் தற்போது நம்முடைய பாடப்புத்தகங்களில் நம்முடைய தோல்விகள்தான் குறிப்பிடப்பட்டுள்ளன. முகலாயர்கள் மற்றும் சுல்தான்கள் மீதான நம்முடைய வெற்றிகள் இல்லை.

எனவே போர்களில் இந்து வெற்றிகளை முன்னிலைப்படுத்த வேண்டும். ஆங்கிலேயர்கள் இந்திய வரலாற்றை இருளில் காட்டியிருக்கின்றனர். எனவே இடைக்கால மற்றும் நவீன காலங்களுடன் இந்திய வரலாற்றின் பாரம்பரிய காலத்தையும் பள்ளிகளில் கற்பிக்க வேண்டும். அனைத்து பாடங்களின் பாடத்திட்டத்திலும் இந்திய அறிவு முறையை அறிமுகப்படுத்த வேண்டும் போன்றவற்றை நாங்கள் பரிந்துரைத்துள்ளோம்' என்றார்.

உயர்மட்டக்குழு இந்த பரிந்துரைகள் அளித்து இருந்தாலும், குழுவின் பரிந்துரைகள் குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று என்.சி.இ.ஆர்.டி. தலைவர் தினேஷ் சக்லானி கூறியுள்ளார்.

# கனடா விசா சேவை மீண்டும் இன்று துவக்கம்

சென்னை, 26 அக்டோபர் 2023: கனடா விசா சேவை, இன்று முதல் மீண்டும் தொடங்க உள்ளதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

கனடாவில் காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜார் கடந்த ஜூன் மாதம் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் இந்தியாவிற்கு தொடர்புள்ளதாக கனடா குற்றம் சாட்டியது. இதையடுத்து, இந்தியா-கனடா இடையே நட்புறவில் விரிசல் ஏற்பட்டது. இதையடுத்து, இந்திய தூதர்கள் வெளியேற கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உத்தரவிட்டார். இதற்கு பதிலடியாக இந்தியாவில் உள்ள கனடா தூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.




இதற்கிடையே, கடந்த மாதம் 21ம் தேதி கனடாவிலிருந்து இந்தியாவிற்கு வர விரும்பும் அந்நாட்டு குடிமக்களுக்கு இந்தியாவில் நுழைய வழங்கப்படும் விசா எனப்படும் உள்நுழையும் அனுமதியை இந்தியா தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. அதைபோல் கனடா மக்களுக்கான விசா சேவைகளை மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தி வைக்க விசா சேவை மையங்களுக்கும் இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் கனடாவில் இருந்து தொழில், மருத்துவம் உள்ளிட்ட காரணங்களுக்காக, இந்தியாவுக்கு வருவது உள்ளிட்ட பல்வேறு விசா சேவைகளை, இன்று (அக்டோபர் 26) முதல் இந்தியா மீண்டும் துவங்க உள்ளது. டொரண்டோ மற்றும் வான்கூவரில் உள்ள துணை தூதரகங்களில் இந்த விசா சேவைகள் தொடங்கப்படும் என இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.




இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

# இந்தியன் வங்கியின் 2023 செப்டம்பர் 30 அன்று முடிவடைந்த காலாண்டு / அரையாண்டுக்கான நிதிசார் முடிவுகள்




சென்னை, 26 அக்டோபர் 2023: நிகர இலாபம் செப்டம்பர்'22-ல் ரூ.1225 கோடி என்பதிலிருந்து செப்டம்பர்'23-ல் ரூ.1988 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 62% உயர்ந்திருக்கிறது

வரிக்கு முந்தைய இலாபம் செப்டம்பர்'22-ல் ரூ.1571 கோடி என்பதிலிருந்து செப்டம்பர்'23-ல் ரூ.2752 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 75% உயர்ந்திருக்கிறது

செயல்பாட்டு இலாபம் செப்டம்பர்'22-ல் ரூ.3629 கோடி என்பதிலிருந்து செப்டம்பர்'23-ல் ரூ.4303 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 19% அதிகரித்திருக்கிறது

நிகர வட்டி வருவாய் செப்டம்பர்'22-ல் ரூ.4684 கோடி என்பதிலிருந்து செப்டம்பர்'23-ல் ரூ.5741 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 23% அதிகரித்திருக்கிறது

கட்டணம் சார்ந்த வருவாய், செப்டம்பர்'22-ல் பதிவான ரூ.723 கோடியைவிட 11% அதிகரித்து செப்டம்பர்'23-ல் ரூ.805 கோடி என உயர்ந்திருக்கிறது

உள்நாட்டளவில் நிகர வட்டி வருவாய் (என் ஐ எம்), செப்டம்பர்'22-ல் 3.20% என்பதிலிருந்து செப்டம்பர்'23-ல் 3.52% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது.

சொத்துக்கள் மீதான இலாபமீட்டல் நிலை (ஆர் ஓ ஏ) செப்டம்பர்'22-ல் 0.71% என்பதிலிருந்து செப்டம்பர்'23-ல் 1.06% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது.

பங்குகள் மீதான இலாபமீட்டல் நிலை (ஆர் ஓ ஈ) செப்டம்பர்'22-ல் இருந்த 13.83% என்பதிலிருந்து செப்டம்பர்'23-ல் 607 பிபிஎஸ் மேம்பட்டு 19.90% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது

வருவாய்க்கான செலவு விகிதம் செப்டம்பர்'22-ல் 44.27% என்பதற்குப் பதிலாக இப்போது 44.36% என பதிவாகியிருக்கிறது

மொத்த வணிகம் முந்தைய ஆண்டைவிட 10% வளர்ச்சியை பதிவு செய்திருக்கிறது, செப்டம்பர்'22-ல் ரூ.1026801 கோடி என்பதிலிருந்து செப்டம்பர்'23-ல் ரூ.1133091 கோடி என்ற அளவை எட்டியிருக்கிறது

செப்டம்பர்'22-ல் ரூ.437941 கோடி என்று இருந்த மொத்த கடன்கள், செப்டம்பர்'23-ல் 12% வளர்ச்சி பெற்று ரூ.492288 கோடியாக அதிகரித்திருக்கிறது

ஆர் ஏ எம் துறைக்கு (ரீடெய்ல், விவசாயம் மற்றும் எம் எஸ் எம் ஈ) வழங்கப்பட்ட கடன்கள் செப்டம்பர்'22-ல் ரூ.255256 கோடி என்ற அளவிலிருந்து செப்டம்பர்'23-ல் ரூ.285891 கோடியாக உயர்ந்து 12% வளர்ச்சியை பதிவுசெய்திருக்கிறது

ரீடெய்ல், விவசாயம், எம் எஸ் எம் ஈ ஆகிய பிரிவுகளுக்கான கடன்கள் முந்தைய ஆண்டைவிட முறையே 14%, 16%, மற்றும் 5% என அதிகரித்திருக்கின்றன. உள்நாட்டு கடன்களுக்கு ஆர் ஏ எம்-ன் பங்களிப்பு 62% ஆக இருக்கிறது. முந்தைய ஆண்டைவிட வீட்டுக்கடன் (அடமானம் உட்பட) 13%, ஆட்டோமொபைலுக்கான கடன் 36% மற்றும் தனிநபர் கடன் 49% என அதிகரித்திருக்கின்றன

வைப்புத்தொகைகள் (டெபாசிட்கள்), முந்தைய ஆண்டைவிட 9% உயர்ந்து செப்டம்பர்'23-ல் ரூ.640803 கோடி என்ற அளவை எட்டியிருக்கின்றன


சேமிப்பு கணக்கில் முந்தைய ஆண்டைவிட பதிவான 8% உந்துதலால் சி ஏ எஸ் ஏ டெபாசிட்கள் 7% வளர்ச்சி கண்டிருக்கின்றன. சி ஏ எஸ் ஏ விகிதம் 40% என்ற அளவில் செப்டம்பர்'23-ல் இருக்கிறது.

ஜி என் பி ஏ (மொத்த வாராக்கடன்கள்) செப்டம்பர்'22-ல் இருந்த 7.30% லிருந்து முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் 233 பிபிஎஸ் குறைந்து 4.97% ஆக பதிவாகியிருக்கிறது. என் என் பி ஏ (நிகர வாராக்கடன்கள்) செப்டம்பர்'22-ல் இருந்த 1.50% லிருந்து செப்டம்பர்'23-ல் 90 பிபிஎஸ் குறைந்து 0.60 % ஆக பதிவாகியிருக்கிறது

வாரா ஐயக்கடன்களுக்கான (பி சி ஆர் ) நிதி ஒதுக்கீட்டு விகிதம் (டி டபிள்யூ ஓ - தொழில்நுட்ப கடன் தள்ளுபடி உட்பட, பி சி ஆர் ), செப்டம்பர்'22-ல் இருந்த 91.08% லிருந்து செப்டம்பர்'23-ல் 456 பிபிஎஸ் அதிகரித்து 95.64% ஆக பதிவாகியிருக்கிறது

மூலதன போதுமான நிலை விகிதம் 15.53% என்பதாகவும் மற்றும் சி ஈ டி-1 என்பது 12.07% & அடுக்கு மி மூலதனம் 12.63% என்ற அளவிலும் பதிவாகியிருக்கின்றன.

# "லேகே பிரபு கா நாம்" பாடலுக்கு கிடைத்த அன்பான வரவேற்பால் சல்மான் கான் - கத்ரீனா கைப் உற்சாகம்




சென்னை, 26 அக்டோபர் 2023: பாலிவுட் மெகாஸ்டார்களான சல்மான் கான் மற்றும் கத்ரீனா கைப் இருவரும் சமீபத்தில் 'டைகர் 3'யிலிருந்து வெளியான 'லேகே பிரப கா நாம்' பாடல் உடனடி ஹிட் ஆனதை தொடர்ந்து ரொம்பவே உற்சாகமடைந்துள்ளார்கள். பிரீத்தம் இசையமைப்பில் ஹிந்தியில் அர்ஜித் சிங் மற்றும் நிகிதா காந்தி, தமிழ் மற்றும் தெலுங்கில் பென்னி தயாள் மற்றும் அனுஷா மணி ஆகியோரால் பாடப்பட்ட இந்த பாடல் இணையத்தை அடித்து நொறுக்கியுள்ளது. ரசிகர்கள் இந்தப்பாடலின் இசையையும் சல்மான் கான் மற்றும் கத்ரீனாவின் அதிரவைக்கும் கெமிஸ்ட்ரியையும் புகழ்ந்து வருகிறார்கள்.

சல்மான் கான் கூறும்போது, "இந்தப் பாடலுக்கான வரவேற்பு ரொம்பவே பாசிட்டிவாக இருப்பதுடன் இந்த பண்டிகை சீசனுக்காக ஒரு பார்ட்டி ஆந்தம் பாடலை ரசிகர்கள் எப்படி கண்டு கொண்டார்கள் என்பதை நினைக்கும்போது மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. என்னுடைய படங்கள் மற்றும் பாடல்கள் மூலம் எப்போதும் மக்களை மகிழ்விப்பதில் நான் சந்தோஷமாக உணர்கிறேன். மக்கள் எல்லாவற்றையும் மறந்து திரையரங்கிற்குள் நுழைந்து சினிமா சிருஷ்டிக்கும் புதிய உலகத்திற்குள் தங்களை இணைத்துக்கொள்ள செய்வதை விட பெரிய சந்தோஷம் என எதையும் நான் பார்த்ததில்லை" என்கிறார்.

மேலும் அவர் கூறுகையில், "பாடல்களும் நடனமும் நமது திரைப்படங்களில், கலாச்சாரத்தில் ஒரு பாகமாக இருக்கின்றன. அதனால் என்னுடைய படங்களின் பாடல்கள் மக்களை உற்சாகப்படுத்தும்போது நான் மகிழ்கிறேன். ஒரு பாடலுக்கான சம்பந்தம் என்பது தலைமுறைகளை கடந்து நிற்கும் என்பதை நான் எப்போதுமே நம்புகிறேன். அப்படி இதுபோன்ற சில பாடல்கள் என் திரையுலக பயணத்தில் எனக்கு அமைந்ததில் நான் அதிர்ஷ்டசாலியாக இருந்திருக்கிறேன். அந்தவகையில் "லேகே பிரபு கா நாம்" பாடலும் சரியான சமயத்தில் அவற்றில் ஒன்றாக மாறும்" என்கிறார்.

கத்ரீனா கூறுகையில், இத்தனை வருடங்களில் ஒரு நடிகையாக என்னுடைய ரசிகர்களின் அன்பு, மீடியா, மற்றும் பார்வையாளர்கள் தான் என்னை வழிநடத்தி செல்கிறது. வெற்றிக்கான உண்மையான உந்துசக்தி என்பது மக்களிடம் இருந்து ஒருவர் பெறுகின்ற உண்மையான அன்பில் தான் இருக்கிறது. "லேகே பிரபு கா நாம்" பாடல் இந்த அளவுக்கு கொண்டாடப்படுவது எங்கள் அனைவருக்கும் அற்புதமான உணர்வாக இருக்கிறது. நடனம் என்பது என்னுடைய விருப்ப செயல்களில் ஒன்று. மேலும் பார்வையாளர்களின் அன்பு என்பது பரிசுத்தமான மகிழ்ச்சி" என்கிறார்.

பிரசித்தி பெற்ற ஹிட் நடனங்களை வழங்குவதற்கு பெயர் பெற்றவர் கத்ரீனா கைப் என்பதால் "லேகே பிரபு கா நாம்" பாடல் அவரது மின்னதிர்வேற்படுத்த கூடிய பார்ட்டி ஆந்தம்களில் ஒன்றாக ஆகிவிட்டது.. மக்கள் நடிகர்களிடம் இருந்து வெறும் நடிப்பு ஆற்றலை மட்டுமல்லாது நீண்டநாட்கள் மனதில் நிற்கும் விதமான பாடல்கள் மற்றும் நடனங்களுக்காகவும் மிகப்பெரிய எதிர்பார்ப்புகளை வைத்துள்ளார்கள் என்பதை கத்ரீனா உணர்ந்தே இருக்கிறார். கத்ரீனா கூறுகையில், "ஒரு படம், நடிப்புத்திறமை, ஒரு பாடல் என இவை அனைத்தும் வெற்றி என சொல்லப்பட வேண்டுமானால் பார்வையாளர்களுடன் தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டி இருக்கிறது. எனது திரையுலக பயணத்தின் வாயிலாக இதை கண்டுபிடித்ததற்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ஒரு படத்தில் நடிப்புத்திறனுடன் சேர்ந்து நாங்கள் நடிக்கும் பாடல்களையும் பார்த்து மக்கள் உற்சாகமடைகிறார்கள் என்பதும் எனக்கு தெரியும்" என்கிறார்.

மேலும் அவர் கூறும்போது, "இதை நான் மிகப்பெரிய பரிசாக எடுத்துக்கொள்கிறேன். ஏனென்றால் பாடல்களும் நடனமும் நமது கலாச்சாரத்தில் நமது திரைப்படங்களில் ஒரு பாகமாக இருப்பதுடன் காலம் காலமாக அவை நேசிக்கப்பட்டும் கொண்டாடப்பட்டும் வந்திருக்கின்றன. நம் பாடல்களின் மீதான மக்களின் எதிர்பார்ப்பும் அது ஒவ்வொரு முறையும் இன்னும் சிறந்த நடிப்பை தருவதற்கு எரிபொருளாக அமைகிறது என்பதையும் நான் அறிந்த இருக்கிறேன்" என்கிறார்.

யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸ் படமாக ஆதித்யா சோப்ரா தயாரிப்பில் மனீஷ் சர்மா இயக்கத்தில் இந்த 'டைகர் 3' உருவாகியுள்ளது. இந்தப்படம் இந்தவருட தீபாவளி ரிலீஸாக வரும் நவம்பர்-12ஆம் தேதி ஞாயிறன்று ஹிந்தி, தமிழ் மற்றும் தெலுங்கில் வெளியாகிறது.

# அபே ஈ-சிட்டி எப்எக்ஸ் என்ஈ மாக்ஸ் என்னும் பயணிகளுக்கான 3-சக்கர மின்சார வாகனத்தை அறிமுகம் செய்துள்ளதன் மூலம் தமிழ்நாட்டின் முதன் மின்சார ஆட்டோவை பியாஜியோ வழங்குகிறது




சென்னை, 26 அக்டோபர் 2023: இத்தாலியைச் சேர்ந்த பிரபல வாகன நிறுவனமான பியாஜியோ குழுமத்தின் 100% துணை நிறுவனமான பியாஜியோ வெஹிக்கிள்ஸ் பிரைவேட் லிமிடெட், இந்தியாவின் முன்னணி சிறிய வணிக வாகன உற்பத்தியாளராகத் திகழ்கிறது. இந்நிறுவனம் புத்தம் புதிய பயணிகள் 3-சக்கர மின்சார வாகனம் அபே ஈ-சிட்டி எப்எக்ஸ் என்ஈ மாக்ஸ் ஐ தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. அபே ஈ-சிட்டி எப்எக்ஸ் என்ஈ மாக்ஸ் தமிழக மாநிலத்தில் உள்ள மாநில போக்குவரத்து ஆணையத்திடம் இருந்து ஒப்புதலைப் பெற்ற முதல் பியாஜியோ 3-சக்கர மின்சார வாகனமாகும். இப்புதிய வாகனத்தை பியாஜியோ வெஹிக்கிள்ஸ் பிரைவேட் லிமிடெட் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் திரு.டியாகோ கிராஃபி மற்றும் பியாஜியோ வெஹிக்கிள்ஸ் பிரைவேட் லிமிடெட், கமர்ஷியல் வெஹிக்கிள்ஸ், ஈவிபி - திரு. அமித் சாகர் ஆகியோர் வெளியிட்டனர். இந்தியாவின் 3டபிள்யூ ஈவி புரட்சியின் முன்னோடிகளாக, பியாஜியோ வெஹிக்கிள்ஸ் மீண்டும் தமிழ்நாட்டின் ஈவி நிலப்பரப்பில் புரட்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது, நகரின் முதல் 3டபிள்யூ பயணிகள் வாகனமான ஈவி - அபே ஈ-சிட்டி எப்எக்ஸ் என்ஈ மாக்ஸ் ஐ அறிமுகப்படுத்துகிறது. இந்த வாகனம் கடைசி மைல் பயணிகள் போக்குவரத்தை மாற்றியமைக்க உறுதியளிக்கிறது. இந்த ஈவி ஆனது பியாஜியோவின் பாராமதி தொழிற்சாலையில் முற்றிலும் பெண்களைக் கொண்ட குழுவால் முழுமையாக அசெம்பிள் செய்யப்பட்டது.

புதிய அபே ஈ-சிட்டி எப்எக்ஸ் என்ஈ மாக்ஸ் ஆனது 145கிமீ (+5கிமீஸ்) வரம்பு, 12-இன்ச் டயர் அளவு, சிறந்த கிரவுண்ட் கிளியரன்ஸ் மற்றும் மேம்படுத்தப்பட்ட கிரேடபிளிட்டி தன்மையுடன் வெளிவருகிறது. பியாஜியோவின் பாராமதி தொழிற்சாலையில் இந்த ஈவி ரேஞ்ச் முழுவதுமாக பெண்கள் குழுவால் அசெம்பிள் செய்யப்பட்டது. நிலையான பேட்டரி தீர்வாகக் கிடைக்கும், அபே ஈ-சிட்டி எப்எக்ஸ் என்ஈ மாக்ஸ் ஆனது புதிய மற்றும் கவர்ச்சிகரமான பெசெல் மற்றும் கண்ணைக் கவரும் கிராபிக்ஸ் மூலம் சிறந்த இத்தாலிய வடிவமைப்பு மரபுகளைக் கொண்டுள்ளது.

புதிய அபே ஈ-சிட்டி எப்எக்ஸ் என்ஈ மாக்ஸ் ஆனது மேம்பட்ட பேட்டரி செயல்திறனுடன் வருகிறது, இதன் விளைவாக நீண்ட வரம்பு, மேம்பட்ட வருவாய் மற்றும் திறன்வாய்ந்த உரிமைச் செலவினைக் கொண்டுள்ளது. இந்த வாகனம் 5 கிமீ வரையிலான இருப்பு வரம்பைக் கொண்டுள்ளது, இது எல்லைப் பதட்டத்தைத் தணிக்க உதவுகிறது. மேலும், பியாஜியோ அபே ஈ-சிட்டி எப்எக்ஸ் என்ஈ மாக்ஸ் பூஜ்ஜியம் சத்தம் மற்றும் அதிர்வுகளுடன் வருவது ஓட்டுனருக்கு சோர்வு இல்லாத சவாரி அனுபவத்தையும் பயணிகளுக்கு மிகுந்த வசதியையும் வழங்குகிறது. 12 அங்குல பெரிய டயர்கள், ஓட்டுநர்களுக்கு சிறந்த சவாரி மற்றும் கையாளும் அனுபவத்தையும், கடினமான, சீரற்ற சாலை நிலைமைகளின் மீதான கட்டுப்பாட்டையும் வழங்குகிறது, பயணத்தை பாதுகாப்பானதாகவும், தொலைதூர இடங்களுக்கு அணுகக்கூடியதாகவும் ஆக்குகிறது. வாகனம் ஓட்டும் போது சிறந்த பார்வை மற்றும் கட்டுப்பாட்டை வழங்க, வாகனத்தின் இருக்கை உயரமும் சரிசெய்யப்பட்டுள்ளது. மேம்பட்ட டெலிமாடிக்ஸ் 2.0 இயக்கிகளுக்கு சிறந்த வழிசெலுத்தலை வழங்குகிறது மற்றும் வாகனத் தொகுப்புகளின் உரிமையாளர்கள் அவற்றை மிகவும் திறன்வாய்ந்த முறையில் கண்காணிக்கவும் நிர்வகிக்கவும் அனுமதிக்கிறது.

தனது உற்சாகத்தைப் பகிர்ந்துகொண்ட, பியாஜியோ வெஹிக்கிள்ஸ் பிரைவேட் லிமிடெட் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர், திரு. டியாகோ கிராஃபி அவர்கள் "சென்னையில் பயணிகள் வாகனப் பிரிவில் தொழில்துறையின் முதல் ஈவி செஅபே ஈ-சிட்டி எப்எக்ஸ் என்ஈ மாக்ஸ் ஐ அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த வாகனம் நிலையான மற்றும் நகர்ப்புற இயக்கத்தின் பொருளாதார எதிர்காலத்தை பிரதிபலிக்கிறது. இது எங்கள் வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, சுத்தமான மற்றும் பசுமையான போக்குவரத்தை வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவர்களின் ஒட்டுமொத்த பயண அனுபவத்தையும் மேம்படுத்துகிறது. எங்களின் திறமையான பொறியாளர்கள் மற்றும் ஆர்&டி குழுவானது புதிய அபே ஈ-சிட்டி எப்எக்ஸ் மாக்ஸ்-ஐ வடிவமைத்துள்ளது, மேலும் சிறந்த வரம்பு, கிரேடபிளிட்டி மற்றும் சுமை சுமக்கும் திறன் ஆகியவற்றின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு உகந்த மதிப்பை உறுதிசெய்து, அத்துடன் போட்டித்தன்மை வாய்ந்த மொத்த உரிமைச் செலவையும் வழங்குகிறது. எதிர்கால இயக்கத்தை மையமாகக் கொண்டு, பியாஜியோ வாகனங்கள் மாற்று எரிபொருட்களை ஏற்றுக்கொள்வதில் இந்தியாவின் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், வாடிக்கையாளர்களின் ஒவ்வொரு தேவைக்கும் எரிபொருள்-சாரா தீர்வுகளை வழங்குவதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளது" என்று கூறினார்.

பியாஜியோ வெஹிக்கிள்ஸ் பிரைவேட் லிமிடெட், கமர்ஷியல் வெஹிக்கிள்ஸ், ஈவிறி - திரு. அமித் சாகர் அவர்கள், "தமிழ்நாட்டின்' முதல் மின்சார பயணிகள் வாகனத்தை அறிமுகப்படுத்துவது ஒரு முக்கியமான சந்தர்ப்பம். அபே ஈ-சிட்டி எப்எக்ஸ் என்ஈ மாக்ஸ் மாநிலத்தின் பயணிகள் வாகன நிலப்பரப்பை முற்றிவுமாக மாற்றியமைக்கும். மேலும் நாட்டில் உள்ள மற்ற மாநிலங்களைப் போலவே இந்த தயாரிப்பு விரைவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு மக்களால் விரும்பப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். இது ஒரு நீண்ட தூர, சிறந்த மொத்த உரிமைச் செலவை வழங்குகிறது, வசதியானது மற்றும் சொகுசானானது. அனைத்திற்கும் மேலாக, இது சத்தம் மற்றும் புகையற்றது. சிறந்த சேவை மற்றும் வலையமைப்பை வழங்குவதில் நாங்கள் முழு அர்ப்பணிப்புடன் இருப்பதால், எதிர்கால போக்குவரத்தை முயற்சிக்க எங்கள் வாடிக்கையாளர்களை வரவேற்கிறோம்.

அபே ஈ-சிட்டி எப்எக்ஸ் என்ஈ மாக்ஸ் ஆனது ரூ. 3,46,240 முதல் துவங்கும் விலை வரம்பில் அறிமுகம்செய்யப்பட்டுள்ளது மற்றும் அனைத்து அபே எலெக்ட்ரிக் எக்ஸ்பீரியன்ஸ் மையங்களிலும் தமிழ்நாடு முழுவதும் கிடைக்கும்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## சினிமா தயாரிப்பில் இறங்கிய மென்பொருள் துறை நிறுவனர் ; வைபவ்-அதுல்யா ரவி படத்தை இயக்கும் இரட்டை இயக்குநர்கள்



சென்னை, 26 அக்டோபர் 2023: மென்பொருள் துறை நிறுவனர் பாபி பாலச்சந்திரன் தயாரிக்கும் படத்தில் நடிக்கும் வைபவ்-அதுல்யா ரவி

பி டி ஜி யுனிவர்சல் நிறுவனம் சார்பில் பாபி பாலச்சந்திரன் தயாரிப்பில் உருவாகும் புதிய படத்தை விக்ரம் ராஜேஸ்வர் - அருண் கேசவ் என்கிற இரட்டை இயக்குனர்கள் இயக்குகின்றனர். கதாநாயகனாக வைபவ் நடிக்க, கதாநாயகியாக அதுல்யா ரவி நடிக்கிறார். மொட்டை ராஜேந்திரன், ஜான் விஜய், கிங்ஸ்லி, சுனில் ரெட்டி, இளவரசு, பி.எல் தேனப்பன் உள்ளிட்ட பலர் இப்படத்தில் நடிக்கின்றனர்.

டி. இமான் இசையமைக்கும் இப்படத்திற்கு டிஜோ டோமி ஒளிப்பதிவு செய்கிறார். படத்தொகுப்பை சுரேஷ் ஏ பிரசாத் கவனிக்க கலையை அருண் சங்கர் துரையும் சண்டை பயிற்சியை டான் அசோக்கும் மேற்கொள்கின்றனர்.

தயாரிப்பு நிறுவனம் : பி டி ஜி யுனிவர்சல் (பாபி டச் கோல்ட் யுனிவர்சல் நிறுவனம்) தயாரிப்பாளர் : பாபி பாலச்சந்திரன் வியூகத் தலைலை (பி டி ஜி) : மனோஜ் பினோ இயக்கம் : விக்ரம் ராஜேஸ்வர் - அருண் கேசவ் இசை : டி. இமான் நடிகர் : வைபவ் நடிகை : அதுல்யா ரவி நடிகர்கள் : மொட்டை ராஜேந்திரன், ஜான் விஜய், கிங்ஸ்லி, சுனில் ரெட்டி, இளவரசு, பி.எல் தேனப்பன் ஒளிப்பதிவு : டிஜோ டோமி படத்தொகுப்பு ; சுரேஷ் ஏ பிரசாத் கலை ; அருண் சங்கர் துரை சண்டை ; டான் அசோக் தயாரிப்பு நிர்வாகி ; வேணுகோபால் உடைகள் ; தாக்ஷா தயாள் மக்கள் தொடர்பு ; ரியாஸ் கே அஹ்மத் டிசைன்ஸ் ; ஷைனு பாபி பாலச்சந்திரன் பற்றி

கோவையை தலைமையிடமாகக் கொண்டு 12 நாடுகளில் 600 க்கும் மேற்பட்ட வல்லுநர்களுடன் தமிழகத்திற்கு பெருமை சேர்க்கும் விதமாக எக்ஸ்டெரோ என்கிற மாபெரும் மென்பொருள் சாம்ராஜ்யத்தை நடத்தி வருபவர் பாபி பாலச்சந்திரன். திருநெல்வேலியின் அருகில் உள்ள நாசரேத்தை சேர்ந்த இவரது நிறுவனத்தின் மென்பொருட்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாடுகளில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட தலைசிறந்த நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வெளிநாடுகளில் அரசு, உளவு, ராணுவம் போன்ற துறைகளில் இந்நிறுவனத்தின் மென்பொருளை பயன்படுத்தி எண்ணற்ற குற்றங்களை தடுத்தும் குறைத்தும் பாதுகாத்து வருகிறார்கள். தாய்நாடு மட்டுமல்லாமல் இதர நாடுகளிலும் தொண்டு நிறுவனங்களை துவங்கி சமூகப் பணியையும் செய்து வரும் பாபி பாலச்சந்திரன் மென்பொருள் துறை மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளிலும் தடம் பதித்துள்ளார். அந்த வகையில் தற்போது சினிமா தயாரிப்பிலும் இறங்கியுள்ளார் பாபி பாலச்சந்திரன்.

## போக்குவரத்து கழக ஊழியர்களுக்கு 20 சதவீதம் போனஸ் வழங்க தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கை



சென்னை, 26 அக்டோபர் 2023: போக்குவரத்து கழக ஊழியர்களுக்கு 20 சதவீதம் போனஸ் வழங்கவேண்டும் என்று தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து போக்குவரத்து கழகங்களில் செயல்படும் அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில், போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் கே.பனீந்திர ரெட்டிக்கு எழுதி உள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:--

தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர்களுக்கு 20 சதவீதம் போனஸ் வழங்கப்பட்டு வந்த நிலையில், கொரோனா காரணமாக 2020-ம் ஆண்டு போனஸ் குறைக்கப்பட்டது. 2021-ம் ஆண்டும் அதே போனஸ் வழங்கப்பட்டது. அரசு மற்றும் நிர்வாகத்தின் நலன் கருதி தொழிலாளர்கள் 10 சதவீதம் போனஸை பெற்றுக்கொண்டனர்.

ஆனால், அதே 10 சதவீதம்தான் 2022-ம் ஆண்டும் வழங்கப்பட்டது. இது தொழிலாளர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. எனவே, அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து 2023-ம் ஆண்டுக்கான போனஸாக 20 சதவீதம் வழங்க வேண்டுகிறோம். போனஸ் கணக்கிடும்போது குறைந்தபட்ச கூலி சட்ட அடிப்படையிலான சம்பளத்தை கணக்கீட்டிற்கான தொகையாக கணக்கிட்டு போனஸ் வழங்க வேண்டுகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சல்மான் கான்-கத்ரீனா கெமிஸ்ட்ரியையும் தோழமையையும் ரசிகர்கள் விரும்புகிறார்கள் ; 'டைகர் 3'யின் "லேகே பிரபு கா நாம்" பாடல் உடனே ஹிட்டானது ஏன் என்பது குறித்து நடன இயக்குனர் வைபவி மெர்ச்சன்ட்



சென்னை, 26 அக்டோபர் 2023: மெகா ஸ்டார்களான சல்மான் கான் மற்றும் கத்ரீனா கைப் இருவரும் இந்திய சினிமா வரலாற்றில் எப்போதுமே மிகப்பெரிய ஆன்-ஸ்கிரீன் ஜோடி. இவர்கள் இருவரும் இந்த வருடத்திய மிகப்பெரிய பார்ட்டி ஆந்தமாக டைகர் 3யிலிருந்து "லேகே பிரபு கா நாம்" பாடலை நமக்கு கொடுத்திருப்பதுடன் இணையதளத்தையும் பற்றியெரிய வைத்துள்ளனர்.

நமது தலைமுறையில் பல சூப்பர்ஹிட் பாடல்களின் பின்னணியில் மூளையாக இருக்கும் நடன இயக்குனர் வைபவி மெர்ச்சன்ட்டிடம் 'டைகர் ஜிந்தா ஹை' படத்தின் "ஸ்வாக் சே ஸ்வாகத்" பாடலுக்கு பிறகு சல்மான் கானையும் கத்ரீனா கைப்பையும் வைத்து மீண்டும் ஒரு பிளாக்பஸ்டர் பாடலை கொடுக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. "லேகே பிரபு கா நாம்" பாடலுக்கு கிடைத்து வரும் வரவேற்பு குறித்தும் அந்தப்பாடல் ஏன் உடனடியாக ஹிட் ஆனது என்பது குறித்தும் சில விஷயங்களை குறிப்பிடுகிறார் வைபவி மெர்ச்சன்ட்

வைபவி கூறும்போது, "ஒரு பாடலுக்கு தேவையான நீதியை வழங்குவதுதான் எப்போதுமே நோக்கமாக இருக்கவேண்டும். அதிலும் இவை இது தொடர் வரிசை படங்கள் வேறு.. நான் ஏற்கனவே 'ஏக் தா டைகர்', 'டைகர் ஜிந்தா ஹை', மற்றும் இப்போது 'டைகர் 3' படங்களில் ஒரு பாகமாக இருந்திருக்கிறேன். அதனால் அந்த எதிர்பார்ப்பு எப்போதுமே சிறந்ததையே செய்ய வைக்கும். ஆம்.. டைகர், சோயாவுடன் மீண்டும் திரும்புவதால் இன்னும் சிறப்பாக, பெரிதாக படத்தின் கருவில் இருப்பதை விட அதிகமாக செய்ய வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கமாக இருந்தது. அதற்காக இந்தமுறை அவர்கள் திரையில் தகிக்க வைத்து, தூண்டிவிட்டு உள்ளே வரும் ரசிகர்களுக்கும் மற்ற ஒவ்வொருவருக்கும் விருந்து பரிமாறி உற்சாகப்படுத்த இருக்கிறார்கள். சல்மான் கான், கத்ரீனா இருவரும் ஒன்றாக நடனம் ஆடும்போது மக்கள் அதை பார்ப்பதற்கு ரசிகர்களை விரும்ப வைப்பது எது என்று வைபவியை கேட்டால், "அவர்களது கெமிஸ்ட்ரி, தோழமை, ஒவ்வொரு பிரேமிலும் அவர்கள் காட்சியளிக்கும் விதம் என்றுதான் நினைக்கிறேன். சல்மானை பொறுத்தவரை அவர் ஏற்கனவே ஏற்றத்தில் இருக்கிறார்... ஏற்கனவே அவர் அழகாக காட்சியளிக்கிறார் என்பதால் அவரை கேமரா முன்பாக கொண்டுவந்து நிறுத்தும் அந்த தருணமே, போரில் பாதி வென்றது போலத்தான். அந்த அளவுக்கு ஒரு ஹேண்ட்சம் ஆன மனிதர் என்பதால் அவரை எந்த கோணத்தில் இருந்தும் படம் பிடிக்கலாம். அவரும் இன்னும் சிறந்ததை வெளிப்படுத்துவார்" என்கிறார்.

மேலும் அவர் கூறும்போது, "கத்ரீனாவை பொறுத்தவரை கேமரா முன் உயிர்ப்புடன் வந்து நிற்பார். மற்றபடி அவர் ரொம்பவே எளிமையான ஒரு பெண். ஆனால் இதையெல்லாம் விட அவர் பைஜாமாவோ இல்லை அவருக்கு வசதியான ஆடைகளையோ அணிந்து அமர்ந்திருப்பார். ஆனால் அதன்பிறகு அதிக அளவில் தனது உழைப்பை கொடுப்பார். தன்னுடைய ஆபரணங்கள், காலணிகள் உள்ளிட்ட அனைத்திலும் தான் என்ன அணிகிறோம் என்பதில் அவர் குறிப்பாக இருப்பார்.. அதனால் தான் திரையில் வரும்போது அவர் கத்ரீனா கைப் ஆக மாறுகிறார்" என்கிறார்.

மேலும் வைபவி கூறும்போது, "அவர்கள் இருவரும் எப்போதுமே என்னுடன் இணக்கமாகவே உணர்கின்றனர். நானும் அவர்களுடன் வசதியானவளாகவே உணர்கிறேன். அவர்கள் ஒவ்வொருவருக்கொருவர் தங்களுக்குள் வசதியாக உணர்வதால், படம் பார்க்கும் பார்வையாளர்களுக்கும் அவர்களை பார்க்கும்போது அதே வசதியான உணர்வு ஏற்படுகிறது. அதனால் அவர்களும் இந்த இருவரையும் விருப்பமுடன் பார்க்கிறார்கள். அவர்கள் ஒன்றாக இருப்பதை கவனிக்க விரும்புகிறார்கள். அவர்கள் இருவரும் அழகான தோற்றம் கொண்டவர்கள். ஒரு இடத்தில் அழகான தோற்றம் கொண்ட இரண்டு நபர்கள் ஒன்றாக இருக்கும்போது பாதி போரை வென்றது போல நான் உணர்கிறேன். அவரது ரசிகர்கள் அவர்களது ஜோடியை புகழ்கின்றனர். திரையில் அவர்களுக்கு இடையேயான கெமிஸ்ட்ரியை புகழ்கின்றனர். அதனால் மிகப்பெரிய மரியாதை, அன்பு மற்றும் ஒருவருக்கொருவர் பணிக்கான பாராட்டுகளும் அவர்களிடமிருந்து கிடைக்கின்றன" என்கிறார்.

சல்மான் மற்றும் கத்ரீனா இருவரும் ஆதித்யா சோப்ராவின் ஸ்பை யுனிவர்ஸின் 'டைகர் 3'யில் பெருமைமிக்க டைகர் மற்றும் சோயா என்கிற தங்களது சூப்பர் ஏஜென்ட் கதாபாத்திரங்களுக்கு மீண்டும் ஒருமுறை திரும்பியுள்ளதுடன் பிரீத்தம் இசையமைப்பில் அமிதாப் பட்டாச்சார்யாவின் பாடல் வரிகளில் உருவாகியுள்ள இந்தப்பாடலில் சல்மான் கானும் கத்ரீனாவும் நம்பமுடியாத அதிர்வுகளை ஏற்படுத்தக்கூடிய அதிரடி நடனத்தையும் ஒன்றிணைந்து வெளிப்படுத்தி உள்ளனர்.

"லேகே பிரபு கா நாம்" பாடலின் ஹிந்தி வெர்ஷனை அர்ஜித் சிங் மற்றும் நிகிதா காந்தி இருவரும் பாடியுள்ளனர். தமிழ் மற்றும் தெலுங்கு வெர்ஷனை பென்னி தயாள் மற்றும் அனுஷா மணி பாடியுள்ளனர். "

"லேகே பிரபு கா நாம்" பாடல் மிக பிரமாண்ட பொருட்செலவில் படமாக்கப்பட்டுள்ளது. இந்தப்படத்தின் நட்சத்திரங்கள் மற்றும் கலைஞர்கள் குழு துருக்கியின் கப்படோசியாவில் உள்ள பல்வேறு கவர்ச்சியான இடங்களுக்கு பயணித்திருக்கின்றனர். மனீஷ் சர்மா இயக்கியுள்ள யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸ் படமான இந்த 'டைகர் 3' இந்த வருடம் நவம்பர்-12ஆம் தேதி ஞாயிறு தீபாவளியில் வெளியாகிறது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# வி ஒய் பி பை பாஸ்ட்டிராக்: இன்றைய இளம் பெண்கள் பார்ட்டிகளுக்கு அணியும் புதிய கைக்கடிகாரம்!



சென்னை, 26 அக்டோபர் 2023: இந்தியாவின் இளைய தலைமுறையினரிடையே ஏகோபித்த ஆதரவைப் பெற்று இளமையின் அடையாள ப்ராண்டாக இருக்கும் ஃபாஸ்ட்ராக் சமீபத்தில் இளம் பெண்களுக்காக பிரத்தியேகமாக வி ஒய் பி என்னும் துணை ப்ராண்டை அறிமுகப்படுத்தி இருக்கிறது. இளமைத் துள்ளல், அசத்தும் ஸ்டைல் என தனக்கே உரிய தனித்துவத்துடன் அறிமுகமாகை இருக்கும் வி ஒய் பி, ஃபேஷன் பாணிகளைக் கொண்டாடும், டிசைன்களின் எது மிகப் புதியதோ அதில் அக்கறையுள்ளவர்களாக இருக்கும் ஃபேஷன் ப்ரியைகளுக்கென அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. இதனால் எந்தவிதமான பார்ட்டிகளானாலும் கொண்டாட்டங்களாக இருந்தாலும் அதில் இளம் பெண்களுக்கு இருக்கும் எதிர்பார்புகளைப் பூர்த்தி செய்து, அவர்களது வசீகரத்தை மற்றவர்கள் கவனிக்க தூண்டும் கைக்கடிகாரங்களாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. வி ஒய் பி -ன் முதல் தொகுப்பில், பார்ப்பவர்களை அசரவைக்கும் 71 அசத்தல் வடிவமைப்புகள் இடம்பெற்றுள்ளன. வித்தியாசமான, அழகியலுடன் வடிவமைக்கப்பட்டிருக்கும் கைக்கடிகார பட்டைகள், புத்தம் புதிய ப்ளேட்டிங் வண்ணங்கள், மனதைக் கவரும் விதவிதமான டயல் வடிவங்கள் என இந்த கைக்கடிகாரத் தொகுப்பு ஒவ்வொரு தருணத்திற்கும், நம்முடைய ஒவ்வொரு மன உணர்வுக்கும் ஏற்ற ஏதாவது ஒரு கைக்கடிகாரம் இருப்பதை வி ஒய் பி ப்ராண்ட் உறுதி செய்கிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த கைக்கடிகாரங்கள் எல்லோரும் பயன்படுத்தும் வகையில் மிக மலிவான விலையில் 1250 ரூபாய் முதல் 2960 ரூபாய் வரையில் கிடைக்கின்றன.

வி ஒய் பி அறிமுகம் மூலம், பாஸ்ட்ராக் தனது தயாரிப்புகளின் எண்ணிக்கையை விதவிதமான பல்வேறு வடிவமைப்புகளுடன் அசரவைக்கும் வகையில் அதிகரித்து இருக்கிறது. இதனால் இன்றைய நவீன யுகத்தில் ஃபேஷன் மீது அலாதியான ஆர்வம் கொண்டிருக்கும் இளம் பெண்களின் ரசனைகளை கொண்டிருப்பதோடு, பார்ட்டி கொண்டாட்டங்களின் உத்வேகத்தை வெளிப்படுத்தும் வகையிலும் வி ஒய் பி அமைந்திருக்கிறது. இதையடுத்து வி ஒய் பி ப்ராண்டின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் தாரக மந்திரமாக, "வி ஒய் பி ஆன்" என்பதை முன்னிறுத்துகிறது.

திரு அஜய் மௌர்யா, சந்தைப்படுத்துதல் பிரிவு தலைவர், ஃபாஸ்ட்ராக் தங்களது புதிய துணை ப்ராண்ட்டின் அறிமுகம் குறித்து பேசுகையில்,''பார்ட்டிகள், விருந்து கொண்டாட்டங்களில் தங்களது அழகும் ஆளுமையும் வெளிப்படும் வகையில் தங்களை அலங்கரித்து கொள்ளும் பெண்களுக்காக வி ஒய் பி-ஐ அறிமுகப்படுத்துவதில் நாங்கள் உற்சாகமடைந்து இருக்கிறோம். பல தருணங்களில் மனதைக் கவர்ந்திழுக்கும் தோற்றத்திற்கு அணிந்து கொள்ள தயாராக இருக்கும் வி ஒய் பி வித்தியாசமான தோற்றத்தை எளிதில் அளிப்பதோடு உங்களை தனித்து காட்டவும் உதவுகிறது. வி ஒய் பி கைக்கடிகாரங்கள் தனித்துவமான ஃபேஷன் வரையறையாக அமைந்திருக்கின்றன. அதனால் இனியும் வி ஒய் பி ஆன் வித் வி ஒய் பி என்பதைப் பார்க்க ஆவலோடு காத்திருக்கிறோம்!"

வி ஒய் பி கைக்கடிகாரங்கள், இந்தியா முழுவதிலும் பாஸ்ட்ராக் மற்றும் டைட்டன் வேர்ல்ட் விற்பனை நிலையங்களில் கிடைக்கின்றன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பல ப்ராண்ட்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களிலும் வாடிக்கையாளர்கள் வாங்கலாம். ஆன் லைன் மூலம் வாங்க, பாஸ்ட்ராக்கின் அதிகாரப்பூர்வ வர்த்தக இணையதளத்திலும், ஃப்ளிப்கார்ட் வர்த்தக இணையதளத்திலும் கிடைக்கின்றன.

# அக்ஷயகல்பா ஆர்கானிக், தமிழ்நாட்டில் உள்ள பூரியம்பாக்கம் பண்ணையில், உலக உணவு தினத்தை கொண்டாடுகிறது



சென்னை, 26 அக்டோபர் 2023: கடந்த ஆண்டு உலக உணவு தினக் கொண்டாட்டத்திற்கு குறிப்பிடத்தக்க வரவேற்பைப் பெற்ற பிறகு, அக்ஷயகல்பா ஆர்கானிக், ஒரு சிறப்பாக தொகுக்கப்பட்ட, உணவு, ஊட்டச்சத்து மற்றும் இயற்கை ஆகியவற்றின் ஒரு முழுமையாக மூழ்கும் நடைமுறை அனுபவமான 'மறந்துபோன உணவுகளின் முக்கியத்துவத்தை மீண்டும் கண்டுபிடிப்போம்' என்ற இரண்டாவது நிகழ்வை, உலக உணவு தினத்தை முன்னிட்டு அக்டோபர் 14, 2023 அன்று சென்னை பூரியம்பாக்கம் பண்ணையில் ஏற்பாடு செய்தது. குடும்பங்கள் மற்றும் ஆர்கானிக் உணவு ஆர்வலர்கள் உட்பட பல்வேறு தரப்புகளைச் சேர்ந்த சுமார் 100 நபர்களின் ஒரு பங்கேற்பை இந்த நிகழ்வு கண்டது.

"நமது அன்றாட வாழ்வில், உணவு ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது, மேலும் இந்த இன்றியமையாத வாழ்வாதாரத்தை நமக்கு வழங்கும் விவசாயிகளின் அத்தியாவசிய பங்களிப்பை கவனிக்காமல் விடுவது எளிது. எனவே, இந்த உலக உணவு தினத்தில் நமது விவசாயிகளை கௌரவித்து கொண்டாடுகிறோம்," என்று அக்ஷயகல்பா ஆர்கானிக் நிறுவனத்தின் இணை நிறுவனரும் தலைமை செயல் அதிகாரியுமான திரு. ஷஷி குமார் கருத்து தெரிவித்தார்.

" 'மறந்துபோன உணவுகளின் முக்கியத்துவத்தை மீண்டும் கண்டுபிடிப்போம்' ' என்ற உலக உணவு தின நிகழ்வில் நாங்கள் பின்பற்ற முடிவு செய்த இந்த கருப்பொருளுடன் இணைந்து, எங்கள் நுகர்வோரை, பண்ணைகளில் விதைப்பு, பயிரிடுதல் மற்றும் பிணைப்பு போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் கலந்துரையாடல்களுடன் உணவு ஆதாரம், பாரம்பரிய விஷயங்கள் மற்றும் நன்மைகளைக் கண்டறியுமாறு வலியுறுத்துகிறோம்." என்று அவர் மேலும் கூறினார்.

பண்ணையில் இருந்து பந்திக்கு ஆர்கானிக் உணவைக் கொண்டுசெல்லும் முறையைக் குறித்து பார்வையாளர்களுக்கு ஒரு ஆழமான புரிதலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது இந்த நிகழ்வு. நாள் முழுவதும் பார்வையாளர்களை ஈடுபடச் செய்த பல செயல்பாடுகளும் இருந்தன. இந்த நடவடிக்கைகளில் மண் குளியல், வயல் உழுதல், வீட்டு உரம் தயாரித்தல், களிமண் மாதிரி தயாரித்தல் மற்றும் மரம் ஏறுதல் ஆகியவை அடங்கும்.

இந்த நிறுவனம் அதன் தொடக்கத்தில் இருந்து எடுத்து வரும் ஒரு முயற்சியான நல்லுணவு இயக்கம் பற்றிய ஒரு பேச்சு இந்த நிகழ்வின் சிறப்பம்சமாக இருந்தது. இந்த இயக்கம், அக்ஷயகல்பா ஆர்கானிக் மூலம் பாதுகாக்கப்படும், ஆர்கானிக் உணவு பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. "அக்ஷயகல்பா ஆர்கானிக் இல் நாங்கள் நமது சுற்றுச்சூழல் அமைப்பின் மற்றொரு இன்றியமையாத அங்கமான கார்பன் வரிசைப்படுத்துதலை ஊக்குவிப்பதில் பெருமிதம் கொள்கிறோம். உலக அளவில், மண்ணின் கார்பன் அளவுகள் ஏமாற்றமளிக்கும் வகையில் மிகக் குறைவாக உள்ளன. இங்கு அக்ஷயகல்பா பண்ணைகளில், எங்கள் மண் ஈர்க்கக்கூடிய 3.6% கார்பன் உள்ளடக்கத்தைக் காட்டுகிறது, அதே சமயம் அமேசான் மழைக்காடுகளில், அது வியக்கத்தக்க வகையில் 7.8% ஐ அடைகிறது. மரங்கள் மட்டுமல்ல, புற்களும் கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சுவதில் திறம்பட செயல்படுகின்றன என்பதை உணர்ந்து, மீளுருவாக்கம் செய்யும் விவசாயத்தின் சாத்தியத்தை நாங்கள் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டோம். எங்கள் பண்ணைகள் தழைத்த புற்களால் செழித்து, ஒரு கார்பன் சேமிப்படமாகவும், எங்கள் கால்நடைகளுக்கு ஊட்டச்சத்துக்கான முக்கிய ஆதாரமாகவும் செயல்படுகிறது. எங்கள் பசுக்களால் உற்பத்தி செய்யப்படும் உரம், மீளுருவாக்க விவசாயத்தின் ஒரு நல்ல சுழற்சியை உருவாக்கி, மண்ணை வளமாக்குகிறது, இந்த சுழற்சி, மண்ணின் கார்பன் அளவுகளை தீவிரமாக அதிகரித்து, காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது," என்று பண்ணையில் நல்லுணவு இயக்கம் பற்றிய விவாதத்தின் போது அக்ஷயகல்பா ஆர்கானிக் இன் சந்தைப்படுத்தல் தலைவர் திருமதி வச்சனா ஷெட்டி கூறினார்.

'மறந்துபோன உணவுகளின் முக்கியத்துவத்தை மீண்டும் கண்டுபிடிப்போம்' முயற்சியின் ஒரு பகுதியாக, அக்ஷயகல்பா ஆர்கானிக் வருகின்ற வாரங்களில் ஹைதராபாத் மற்றும் பெங்களூரில் உலக உணவு தின கொண்டாட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் வகையில் இதே போன்ற நிகழ்வுகளை நடத்தும்.

# தனைரா 'தி குயின்ஸ் கலெக்ஷன்' என்ற சேலைத் தொகுப்பை வெளியிட்டு பண்டிகைக் கொண்டாட்டத்தை வரவேற்கிறது!




சென்னை, 26 அக்டோபர் 2023: இந்த தீபாவளிக்கு, டாடா தயாரிப்பான தனைரா, தமது பண்டிகைத் தொகுப்பான "தி குயின்ஸ் கலெக்ஷன்" என்ற சேலைத் தொகுப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம் உங்கள் கொண்டாட்டத்திற்குப் பிரகாசம் சேர்க்கிறது. பிரமிக்க வைக்கும் வகையில் மிருணாள் தாக்கூர் இது தொடர்பான விளம்பரத்தில் தோன்றுகிறார். தூய பட்டு ரகத்தில் கைவினைக் கலையின் நேர்த்தியான வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட இந்தத் தயாரிப்பு தொடர்பாக தொலைக்காட்சி விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. மிருணாள் தாகூர் தமது நேர்த்தியான தோற்றத்தில், சுழன்று சுழன்று நடனமாடி, பண்டிகை உணர்வில் ஒன்றி, இந்த குயின்ஸ் கலெக்ஷன் என்ற புடவைத் தொகுப்புக்கான விளம்பரத்தில் நடிகத்துள்ளார். இது இன்றைய உற்சாகமான பெண்களுக்கும் வாழ்வில் சுயமாக செயல்பட்டு சுயமாக முன்னேறும் பெண்களுக்கும் ஒரு மரியாதை ஆகும். நாடு முழுவதும் உள்ள பல்வேறு வகையான பார்வையாளர்களுடன் பேசும் வகையில் அவர்களுக்கேற்ற மொழியில் இந்த விளம்பரப் பிரச்சாரம் வடிவமைக்கப்பட்டுள்ளது தனைராவின் இந்த விளம்பரப் பிரச்சாரம். ஒரு பெண் கட்டுப்பாடற்ற மகிழ்ச்சியை அனுபவிப்பதையும், தமது உண்மையான சுயத்தை வெளிப்படுத்துவதையும், அலங்கரிக்கும்போது ஒரு ராணி என்ற தமது உள்ளார்ந்த உணர்வை வெளிப்படுத்துவதையும் சித்தரிக்கிறது. புடவை என்பதை தனித்துவத்தை பிரதிபலிக்கும் ஒரு அழகான அம்சமாக இது மாற்றுகிறது. பண்டிகைக் கொண்டாட்டங்களாக இருந்தாலும் சரி, குடும்ப பாரம்பரியமாக இருந்தாலும் சரி, சேலைகள், அந்தத் தருணங்களின் பொக்கிஷமாக மாறி, கால மாற்றத்திற்கும் ஸ்டைலுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்து, விலைமதிப்பற்ற நினைவுகளைப் பாதுகாக்கும் ஒரு வழிமுறையாக செயல்படுகின்றன.

நீர், காற்று, ஆகாயம், பூமி மற்றும் நெருப்பு ஆகிய ஐந்து அடிப்படை பஞ்ச பூத சக்திகளால் ஈர்க்கப்பட்ட தி குயின்ஸ் தொகுப்பு, தனைராவின் புதுமையான வடிவமைப்புகள் மற்றும் பலதரப்பட்ட வகைகளுக்கான உறுதியான அர்ப்பணிப்பின் சான்றாக நிற்கிறது. சுயத்தை வெளிப்படுத்தும் தன்மையையும், அனைத்து அம்சங்களையும் கொண்ட பன்முகத்தன்மையையும் வழங்கும் இந்தத் தொகுப்பு, சுய உறுதிப்பாடு மற்றும் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தக் கூடிய நவீன காலப் பெண்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறது. ஒவ்வொரு சேலையும் வலிமை மற்றும் சுதந்திரத்தின் தன்மையை வெளிப்படுத்துகிறது. சேலையின் ஒவ்வொரு மடிப்பும் ஒரு பெண் தமது சொந்த வாழ்க்கையில் ஒரு ராணியாக ஆட்சி செய்வதன் சாராம்சத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இந்த விளம்பரம் குறித்து தமது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட தனைராவின் பொது மேலாளர் திருமதி ஷாலினி குப்தா, "மிருணாள் தாக்கூருடன் 'தி குயின்ஸ் கலெக்ஷன்' தொகுப்புக்கான விளம்பரப் படத்திற்காக நாங்கள் இணைந்தது செயல்படுவது தற்காலப் பெண்களின் கொண்டாட்டமாகும். சேலை என்பது ஆடை என்ற வரம்பை மீறி ஸ்டைல், ரசனை மற்றும் சுய வெளிப்பாடு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தற்காலப் பெண்கள் தமது ஆடைத் தேர்வுகள் மற்றும் செயல்கள் மூலம் தமது அடையாளத்தை வெளிப்படுத்துகிறார்கள். அவ்வாறு செய்வதன் மூலம், அவர்ளீள் ஒரு இறையாண்மையாளராக, தமது சொந்த வாழ்வில் ராணியாக வெளிப்படுகிறார்ளீள். ஒரு நவீனப் பெண் தனைரா சேலையை அணியும்போது, மாயாஜாலம் நிகழ்கிறது. ஒரு இயல்பான உணர்வும், நம்பிக்கையின் எழுச்சியும், இயல்பான வசந்தமும் அந்தப் பெண்ணிடம் வருகிறது." என்றார்.

இந்த விளம்பரம் மற்றும் இந்தக் கூட்டுச் செயல்பாடு குறித்துப் பேசிய மிருணாள் தாக்கூர், "நம் நாட்டின் சேலை மற்றும் கைவினைக் கலாச்சாரத்தை ஆழமாகக் கொண்டாடுபவர் என்ற முறையிலும், அதன் நேர்த்தியை ரசித்து அணிந்து ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்துபவர் என்ற முறையிலும், தனைராவின் இந்த விளம்பரப் பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். தி குயின்ஸ் கலெக்ஷன் சேலைத் தொகுப்பின் பிரம்மாண்டமும் வசீகரமும் தனித்துவமான ஸ்டைலும் உள்ளார்ந்த வலிமையையும், நம்பிக்கையுடன் திகழும் நவீனப் பெண்களின் சாராம்சத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது" என்றார்.

ஒகில்வி நிறுவனத்தின் தென்மண்டலப் பிரிவு படைப்பாற்றல் தலைமை அதிகாரி புனித் கபூர் கூறுகையில், "நவீன ஆடை தொடர்பான விளம்பரம் மற்றும் தகவல்தொடர்பு, எளிமையுடன் ஒரு கருத்தை வெளிப்படுத்த வேண்டும். அந்த வகையில் இந்த விளம்பரம் அமைந்துள்ளது. இது உங்களை உணர வைக்கிறது. பேசும் வார்த்தையை விட இதன் கருத்துகள் மிகவும் முக்கியமானது. பண்டிகைளுடன் சேலைகள் மிகவும் தொடர்புடையவை. ஒரு நவீன காலப் பெண்ணின் ஆன்மாவைச் சுற்றி ஒரு ராஜ உணர்வை ஏற்படுத்தும் அசாதாரண சக்தியை சேலைகள் கொண்டுள்ளன. இந்த விளம்பரம் அந்த மகத்தான உணர்வைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது" என்றார்.

# பத்திரப்பதிவு வழிகாட்டு மதிப்பு 3 மடங்கு உயர்வு: தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கடும் எதிர்ப்பு



சென்னை, 26 அக்டோபர் 2023: வணிகப் பயன்பாட்டுக்கான மனைகளுக்கு அரசு வழிகாட்டு மதிப்பு 3 மடங்கு உயர்த்தப்படுவதற்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கடும் எதிர்ப்பு உள்ளது.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தமிழகத்தில் குடியிருப்பு மனைகளின் அரசு மதிப்பீடு அண்மையில் அனைத்து பகுதிகளிலும், உயர்த்தி அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள் வணிக பயன்பாட்டுக்கான மனைகளின் அரசு வழிகாட்டு மதிப்பீடு, சாதாரண குடியிருப்பு மனை மதிப்பீட்டிலிருந்து 3 மடங்கு உயர்த்தி அறிவிப்பு வெளியிட இருப்பதாக தெரிய வருகின்றது.

வணிகர்களும், வணிகமும் ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது. ஆன்லைன் வர்த்தகம், தற்காலிக விழாக்கால கடைகள், போக்குவரத்து கட்டண உயர்வு, மின் கட்டணம், சொத்துவரி உயர்வு, என பல்வேறு காரணங்களால் தொழில் நசிந்து வரும் நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது.

இந்த கால கட்டத்தில் வணிகப் பயன்பாட்டுக்கான மனைகளுக்கு அரசு வழிகாட்டு மதிப்பு 3 மடங்கு உயர்த்துவதாக இருப்பது மிகவும் வேதனைக் குரியதாகும். இதனால் புதிதாக தொழில் தொடங்குவோர், புதிய வணிக நிறுவனர்கள் தொழிலுக்கு வருவதில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, சொத்து பரிமாற்றத்திலும், மிகப்பெரும் மந்த நிலையை ஏற்படுத்தும்.

இதனால், வேலை வாய்ப்பின்மை அதிகரிக்கும். தமிழக முதலமைச்சர் இவற்றை கவனத்தில் கொண்டு, வணிக மனைகளுக்கான அரசு வழிகாட்டு மதிப்பீட்டு உயர்வினை உடனடியாக மறுபரிசீலனை செய்திட வேண்டுமென வணிகர்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.